# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## SC.No.86/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 14 | நாள் | : | 20.03.2025 |
| பெயர் | : | வெங்கடேஷ் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 20th day of March 2025.

எதிரி ஆஜர்.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது தென்காசி மத்திய நுண்ணறிவுப் பிரிவில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு வாசுதேவநல்லூர் காவல் நிலையத்தில் பணிபுரிந்தபோது 23.10.2017 அன்று மதியம் 3 மணிக்கு உதவி ஆய்வாளர் உத்தரவுப்படி திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று பிணக்கிடங்கிலிருந்த சடலத்தை அடையாளம் காட்டி சடலக்கூராய்விற்கு ஒப்படைத்தேன். எனக்கு வழங்கப்பட்ட கடவுச்சீட்டு அ.சா.ஆ.8 ஆகும். பின்னர் நிலையம் திரும்பி அறிக்கை செய்தேன். மீண்டும் 31.10.2017 ம் தேதி உதவி ஆய்வாளரின் அறிவுரைப்படி நிலைய கு.எண். 247/2017 வழக்கின்

பொருட்களை சிவகிரி நீதித்துறை நடுவர் நீதிமன்றம் சென்று வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில் சொத்துக்களை பெற்றுக்கொண்டு திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகம் சென்று ஒப்படைத்தேன். அதற்கான கடவுச் சீட்டு அ.சா.ஆ.9 ஆகும். பின்னர் நிலையம் திரும்பி உதவி ஆய்வாளரிடம் அறிக்கை செய்தேன். என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரி தரப்பில் கு.வி.**

நான் தற்போது முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்களைத்தான் ஆய்வாளர் விசாரணையிலும் கூறினேன். நான் கூறுவதுபோல் 23.10.2017 தேதி திருநெல்வேலி மருத்துவமனையில் சடலத்தை அடையாளம் காட்டியதாக கூறுவதும் பின்னர் 31.10.2017 அன்று சிவகிரி நீதிமன்றம் சென்று சொத்துக்களை பெற்றுக் கொண்டு திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகம் சென்று பொருட்களை ஒப்படைத்ததாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. என் பெயரில் தயாரிக்கப்பட்ட ஆவணங்களுக்கேற்ப பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.03.20 17:25:07 +0530

DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

**SC.No. 86/2024**

| | | | |
|---|---|---|---|
| அ.சா . | : 13 | நாள் | : 20.03.2025 |
| பெயர் | : கணேசன் | தொழில் | : |
| தந்தை பெயர்/ | : | சமயம் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூகா | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 20th day of March 2025.

எதிரி ஆஜர்.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது தென்காசி தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சிரஸ்தரராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு சிவகிரி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தலைமை எழுத்தராக பணிபுரிந்தபோது கடந்த 27.10.2017 ம் தேதி வாசுதேவநல்லூர் காவல்நிலைய கு.எண்.247/2017 வழக்கின் சொத்துக்களை இராசாயண பரிசோதனைக்கு அனுப்பி அறிக்கை பெற்றுத்தரும்படி கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை நடுவரின் பார்வைக்கு வைத்து நடுவரின் உத்தரவுப்படி நீதிமன்ற பாதுகாப்பிலிருந்த சொத்துக்களை வாசுதேவநல்லூர் காவல் நிலைய காவலர் திரு.வெங்கடேஷ் என்பவர் மூலம் திருநெல்வேலி வட்டார தடய அறிவியல்

ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் கு.வி இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.03.20 17:25:14 +0530